**கிண்ணியா பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிண்ணியா பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிண்ணியா பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை உள்ளூராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.
இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகளான நிதியாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | மீளாய்வாண்டில் உள்ளூராட்சி திணைக்களத்தினாலும் அன்பளிப்புச் செய்யப்பட்ட அத்துடன் பிரதேச சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட கூட்டு மொத்தம் ரூபா 927,205 பொருட்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை | 2023 ஆம் ஆண்டு நிதிக்கூற்று தயாரிக்கும் போது சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய சொத்துக்கள் நிலையான சொத்துக்களில் உள்ளடக்கப்பட வேண்டும் |
| ஆ) | மீளாய்வாண்டிற்காக மின்மாணி பொருத்தப்படாத வீதி விளக்குகளுக்காக செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 401,856 உள்ளடங்களாக மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான செலுத்த வேண்டிய ரூபா 1,102,528 தொகையை கணக்கீடு செய்திருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | நிதிக கூற்றுக்கள் சரியாக தயாரிக்க வேண்டும். |
| இ) | மீளாய்வாண்டுக்கான கணக்காய்வுக் கட்டணத்தை மற்றும் கடந்த ஆண்டுக்கான | மீளாய்வாண்டில் கணக்காய்வு கட்டணத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு கொடுப்பனவு | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட வேண்டிய ரூபா 60,600 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்கு கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| ஈ) | கடந்த ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 199,500 பெறுமதியான கண்காணிப்புக் கமராவின் கிரயம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | கொரோனா தொற்று காலத்தில் எமது சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட கண்காணிப்புக் கமராவானது கிண்ணியா நடுத்தீவு ஆயுர்வேத வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்த போதும் அதனை மீளப் பெறுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | -மேற்படி- |
| உ) | 2021 திசெம்பர் மாதத்திற்காக மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் மீள் நிரப்பு செய்யப்பட்ட சம்பளம் மற்றும் சபை உறுப்பினர்களின் கொடுப்பனவுகளின் கூட்டுமொத்தத் தொகையான ரூபா 1,948,935 ஆனது மீளாய்வாண்டுக்கான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மீளாய்வுக்கான வருமானமாக உள்ளடக்க முடியாது. ஏனெனில் ஜனவரி மாதத்திலேயே மேற்கூறப்பட்ட தொகை மீள்நிரப்ப படுவதனால் அவ்வாறு காட்டமுடியாமல் உள்ளது. | (உரிய பதில் வழங்கப்படவில்லை) அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்ய வேண்டும். |
| ஊ) | 2021 ஆம் ஆண்டு நிறைவு செய்யப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை செயற்திட்டங்களுக்காக (PSDG) உதவி உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து கிடைக்கப் பெற்ற ரூபா 1,796,907 தொகை மீளாய்வாண்டிற்கான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பெறவேண்டிய வருமானமாக நிதிக் கூற்றில் காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

**1.6.2 கணக்காய்விற்காக எழுத்து மூலச் சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 29,879,572 பெறுமதியான 04 கணக்கு மீதிகளில் விரிவான பட்டோளைகள் மற்றும் பண்டக கணிப்பீட்டறிக்கை சமர்ப்பிக்காத காரணத்தால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதிக்க முடியவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | சொத்தக்கள் தொடர்பாக உரிய புத்தகங்கள் பேணப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) நி.பி 371 | ரூபா 380,484 ஆன 08 ஆண்டுகளை விஞ்சிய முற்பணம் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த திணைகளங்களில் அங்கீகாரத்துடன் பதிவழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.. | முற்பணம் தீர்க்கப்படல் வேண்டும். |
| (ii) நி.பி 571 | காலாவதியான கூட்டுத்தொகை ரூபா 563,003 ஆன வைப்புகளை தீர்திருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் படி குழு ஒன்றினை அமைத்து மதிப்பீடு செய்து 02 வருடங்களுக்கு மேலாகவுள்ள கணக்கினை மீளளிப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானங்களை மிகைத்த மீண்டுவரும் செலவுகள் ரூபா 4,257,574 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானங்களை மிகைத்த மீண்டுவரும் செலவீனங்களை ரூபா 4,583,208 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” | ரூபா ”000” |
| i) | வீதவரியும் வரியும் | 50 | - | - | - | 50 | - | -- | - |
| ii) | வாடகை | 8,475 | - | 3,034 | - | 9,175 | - | 293 | - |
| iii) | உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 1,740 | - | 1,140 | - | 1,595 | - | 5,722 | - |
| iv) | ஏனைய வருமானம் | 24,357 | - | 11,255 | 7,382 | 18,680 | - | 36,520 | 7,382 |
| | | **34,622** | -- | **15,429** | **7,382** | **36,090** | -- | **42,535** | **7,382** |

- மீளாய்வாண்டுக்கும், கடந்தாண்டுக்குமான பட்டியல்படுத்தப்பட்ட வருமானம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **அ) வீதவரி மற்றும் வரி**<br>1946 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் மதிப்பீடு சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | ஆதனங்களை மதிப்பீடு செய்வதற்கு விலைமதிப்பீட்டு திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | மதிப்பீட்டை விரைவுபடுத்த வேண்டும். |
| **ஆ) வாடகை**<br>குத்தகைக் காரர்களிடமிருந்து 2007 முதல் 2021 வரையிலான காலப்பகுதியில் அறவிட வேண்டிய தொகை ரூபா 7,382,901 ஆகும். | இந்த குத்தகை தொகைக்குரிய குத்தகை விபரங்கள் பெற்றுக் கொள்ள முடியாமையினால் இதனை மதிப்பீடு செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்வதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே இதனை முறையாக பரிசீலித்து பதிவழிக்க செய்வதற்கான சபைத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது | நிலுவைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் |
| **(இ) நீதிமன்ற தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**<br>i) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய | தற்போது முத்திரைக் கட்டணம் அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரிகளிடமிருந்தும் அறவிட வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 5,935,798 ஆகும். | | |
| ii) | கிண்ணியா பிரதேச சபையின் 2016 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதிக்கு கோரிப் பெறப்படவேண்டிய ரூபா 2,495,500 முத்திரைக்கட்டணம் பெறுவதற்கு தவறியமையின் காரணமாக மாகாண நிதியத்தின் வருமானத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. | முத்திரைக் கட்டண தொகையினை பிரதி பிரதம (நிதி) ஊடாக கிழக்கு மாகாண இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெறுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | பிரதேச சபை நிதி மற்றும் நிருவாக விதி 81 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| ஆ) | 2022 மார்ச் 21 ஆம் திகதி உள்ளுராட்சி அபிவிருத்தி உதவிச் செயற்திட்டத்தின் (LDSP) கீழ் கொள்வனவு செய்யப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 2,150,000 பெறுமதியான திண்மக்கழிவுகளை உரமாக்கல் செய்வதற்கான 03 இயந்திரங்கள் இற்றைவரை பொருத்தப்படாததுடன் ஒழுங்கான முறையில் பேணப்படவில்லையென அவதானிக்கப்பட்டிருந்தன. | இந்த இயந்திரங்கள் தற்போது International Kinniya mamu Pvt (Ltd) எனும் நிறுவனத்தடன் ஒப்பந்தம் செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்கான அனுமதி கிடைத்தவுடன் குறித்த இயந்திரம் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்படும். | இயந்திரங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | பயன்படுத்தப்படாத சொத்துக்கள் | | |
| i) | 2016 ஆண்டு சபை நிதியின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 199,762 பெறுமதியான உப்பாறு பொதுமலசலகூடம் தண்ணீர் வசதி மேற்கொள்ளப் படாமையினால் 08 ஆண்டுகளாக பாவிக்கப்படாது விளைவற்று காணப்பட்டது. | தற்போது NGO மூலம் குழாய்க்கிணறு மூலம் நீர் வசதிகள் செய்யப்பட்டு பொது மக்களின் பாவனைக்கு விடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| ii) | 2016 ஆண்டு குறித் தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நிதி (PSDG) செயற்திட்டத்தின் மூலம் ரூபா 897,155 செலவில் நிர்மாணிக்கப் பட்ட கட்டிடம் 08 ஆண்டுகளாக பாவிக்கப்படாது விளைவற்று காணப்பட்டது. | குறித்த கட்டடத்தினை கையகப்படுத்துவதற்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. | -மேற்படி- |
| iii) | 2022 திசெம்பர் 29 ஆம் திகதி மாகாண குறித்தொதுக்கப்பட்ட நன்கொடை வேலைத் திட்டத்தின் | தும்பு தயாரித்தல் இயந்திரம் பாவனைக்கு உட்படுத்தப்படுதல் தொடர்பாக உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதிக்காக | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| (PSDG) கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 410,000 பெறுமதியான தும்பு தயாரித்தல் இயந்திரம் பயன்படுத்தப்படாது விளைவற்று காணப்பட்டது. | அனுப்பி வைக்கப்பட்டுள்ளது அதற்கான அனுமதி கிடைத்தவுடன் குறித்த இயந்திரம் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

**ஆ) உரிமை மாற்றம் செய்யப்படாத சொத்துக்கள்**

| | | |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 09 வாகனங்கள் பிரதேச சபையின் பெயருக்கு மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற குறிப்பிட்ட வாகனங்களுக்கான உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | உரிமை மாற்றம் செய்வதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 3.3 செயற்பாடுகளை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| திண்மக்கழிவு முகாமைத்துவ திட்டத்தின் கீழ் ரூபா 27,272,144 செலவில் திண்மக்கழிவு சேகரிக்கும் நிலையம் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் நிர்மாணிக்கப் பட்டிருந்ததும், அச்செயற்பாடு இன்றுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையில் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், கணக்காய்வு நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சபையின் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தரினால் தற்போது உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொண்டு செய்யப்படுகின்றது. | உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| சபையின் பாதிடப்பட்ட செலவுகளிற்கும் உண்மையான செலவினத்திற்குமிடையே 10 சதவீதம் முதல் 54 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டதால். பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியாக பயன் படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பாதீடு கட்டுப்பாட்டு சாதனமொன்றாக பயன்படத்தப்பட வேண்டும். |